Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன்கிழமை, ஜூலை 10, 2024 | இதழ் 88

# தரவரிசை பட்டியல் வெளியீடு என்ஜினீயரிங் கவுன்சிலிங் 22-ந்தேதி துவங்குகிறது செங்கல்பட்டு மாணவி முதலிடம்

சென்னை, 10 ஜூலை 2024: தமிழகத்தில் என்ஜினீயரிங் படிப்புகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு தரவரிசை பட்டியல் இன்று வெளியிடப்பட்டது. 22 ந்தேதி முதல் கவுன்சிலிங் துவங்க உள்ள நிலையில் 29 ந்தேதி பொது பிரிவு ஆரம்பமாகிறது.

அண்ணா பல்கலைக்கழக இணைப்பில் உள்ள 450க்கும் மேற்பட்ட என்ஜினியரிங் கல்லூரிகளில், 2024 25ம் கல்வியாண்டில் பி.இ. பி.டெக். முதலாம் ஆண்டு மாணவர் சேர்க்கைக்கு 'ஆன்லைன்' கவுன்சிலிங் நடத்தப்படுகிறது. இந்த படிப்புகளில் சேருவதற்கான விண்ணப்பப் பதிவு கடந்த மே மாதம் 6ம்தேதி தொடங்கி, கடந்த மாதம் (ஜூன்) 12ம்தேதியுடன் நிறைவு பெற்றது.

இந்த ஆண்டு கவுன்சிலிங்கில் பங்கேற்க 2 லட்சத்து 53 ஆயிரத்து 954 பேர் விண்ணப்பப் பதிவு செய்திருந்தனர். இதில் 2 லட்சத்து 9 ஆயிரத்து 645 பேர் விண்ணப்பக் கட்டணத்தை செலுத்தி இருந்தனர். இந்த நிலையில் விண்ணப்பக் கட்டணம் செலுத்தியவர்கள் அனைவருக்கும் ரேண்டம் எண் கடந்த மாதம் 12ம்தேதி வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்த மாதம் 13ம்தேதி முதல் 30ம்தேதி வரை சான்றிதழ்களை பதிவேற்றம் செய்தவர்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டது.



இந்த நிலையில் ஏற்கனவே வெளியிட்டு இருந்த அட்டவணைப்படி, விண்ணப்பித்து, கட்டணம் செலுத்தி, சான்றிதழ்களை பதிவேற்றம் செய்தவர்களுக்கான தரவரிசைப் பட்டியலை தொழில்நுட்பக்கல்வி இயக்கக ஆணையர் வீரராகவராவ் இன்று வெளியிட்டார்.

அப்போது அவர் கூறியதாவது:

www.tneaonline.org என்ற இணையதளத்தில் என்ஜினீயரிங் தரவரிசைப் பட்டியல் வெளியாகி உள்ளது. இந்த தரவரிசைப் பட்டியலில் 200க்கு 200 மதிப்பெண் பெற்று முதல் 2 இடங்களை மாணவிகள் பிடித்துள்ளனர்.

விண்ணப்பத்தில் தகுதி பெற்ற 1 லட்சத்து 99 ஆயிரத்து 868 பேருக்கு என்ஜினீயரிங் கலந்தாய்வு வருகிற 22 ந்தேதி தொடங்கி செப்டம்பர் 11-ந்தேதி வரை நடைபெறுகிறது. விண்ணப்பித்தவர்களில் 9,777 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அரசுப் பள்ளிகளில் பயின்ற சிறப்பு இட ஒதுக்கீடு பிரிவினருக்கான கலந்தாய்வு 22, 23 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. பொதுப்பிரிவில் சிறப்பு இட ஒதுக்கீடான மாற்றுத்திறனாளி, முன்னாள் படைவீரர், விளையாட்டு வீரர் பிரிவினருக்கான கலந்தாய்வு 25 ந்தேதி முதல் 27 ந்தேதி நடைபெறுகிறது.

பொதுக் கலந்தாய்வு ஜூலை 29ந்தேதி முதல் செப்டம்பர் 3-ந்தேதி வரை நடைபெறுகிறது. மேலும் துணைக் கலந்தாய்வு செப்டம்பர் 6 முதல் 8ந்தேதி வரை நடைபெறுகிறது. செப்டம்பர் 11 ந்தேதியுடன் கலந்தாய்வு நிறைவு பெறுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

200க்கு 200 மதிப்பெண் எடுத்து முதல் 10 இடங்களை பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

1. தோஷிதா லட்சுமி (செங்கல்பட்டு) 2. நிலஞ்சனா (திருநெல்வேலி) 3. கோகுல் (நாமக்கல்) 4. அஸ்விதா (அரியலூர்) 5. சபிக் ரகுமான் (அரியலூர்) 6. சிபன் ஆஷி (கோவை) 7. பாவ்யாஶ்ரீ (விழுப்புரம்) 8. நவீனா (அரியலூர்) 9. அட்சயா (தஞ்சாவூர்) 10. கார்த்தி விஜய் (கிருஷ்ணகிரி) 7.5% இட ஒதுக்கீட்டில் இதேபோல 7.5 சதவீத இட ஒதுக்கீட்டின்கீழ் சேலம் வீரபாண்டியை சேர்ந்த ராவணி 199.50 கட் ஆப் பெற்று முதலிடத்தை பெற்றுள்ளார். 2,267 தொழிற்கல்வி மாணவர்கள் விண்ணப்பித்த நிலையில் 199 மதிப்பெண் எடுத்து ஈரோடு அஸ்வந்த் முதலிடம் பிடித்துள்ளார்.

# சிதம்பரத்தில் கனகசபை மீதேறி தரிசனம் செய்ய அனுமதி சமூக நீதியை நிலைநாட்டுகின்ற அரசாக தி.மு.க. திராவிட மாடல் அரசு திகழ்கிறது: அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி

சென்னை, 10 ஜூலை 2024: இன்றைக்கு ஒரு மகிழ்ச்சியான நாள். சமூக நீதி மறுக்கப்படுகின்ற பல்வேறு மாநிலங்களில், திராவிட மாடல் ஆட்சியானது தமிழ்நாட்டில் சமூக நீதியை நிலைநாட்டுகின்ற அரசாக செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலில் கனக சபை மீது பக்தர்களை அனுமதிக்காத நிலையில் முதலமைச்சர் ஸ்டாலின் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தான் நீதிமன்றத்தின் மூலம் கனக சபையில் மீதேறி தரிசனம் செய்வதற்குண்டான உரிமையை பெற்று தந்தோம் என்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறினார்.



திருமஞ்சனம் என்று காரணம் காட்டி, விழாக் காலங்களில் யாரையும் கனகசபையில் ஏற்றாத நிலையில் சென்னை உயர்நீதிமன்றம் திருமஞ்சனத்திற்கு கூட கனகசபையில் பக்தர்களை சட்டத்திற்கு உட்பட்டு அனுமதிக்க வேண்டும் என்ற உத்தரவிட்டதைத் தொடர்ந்து, இன்று காலை முதல் பக்தர்கள் மகிழ்ச்சியோடு கனகசபை மீதேறி சுவாமியை தரிசித்துக் கொண்டிருக்கின்றனர் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்து திராவிட மாடல் ஆட்சியிலே சமூக நீதி நிலைநாட்டப்படுகிறது என்பதற்கு இதை ஒரு உதாரணமாக சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு இன்று சென்னை, வியாசர்பாடி ரவீஸ்வரர் கோயிலில் ரூ.1.98 கோடி மதிப்பீட்டிலான திருப்பணிகளையும், மேற்கு மாம்பலம் பாஷ்யகார ஆதிசென்ன கேசவப் பெருமாள் கோயிலில் ரூ.59.40 லட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் பணிகளையும் தொடங்கி வைத்தார்.

பின்னர், மேற்கு மாம்பலத்தில் அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 97 கோயில்களுக்கு ரூ.58.82 கோடி மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் பணிகளும், ரூ.13.38 கோடி மதிப்பீட்டில் 50 மரத்தேர்களில் மராமத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்தாண்டு வரை 3 புதிய தங்கத்தேர்களும், 5 வெள்ளித் தேர்களும் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் திருத்தணி வெள்ளித்தேர் நிறைவுற்று பக்தர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தாண்டு 2 புதிய தங்கத்தேர்களும், 4 வெள்ளித்தேர்களும் உருவாக்கப்பட உள்ளன.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான், ஆட்சியின் மீதும் இந்து சமய அறநிலையத்துறையின் மீதும் வைத்திருக்கின்ற நம்பிக்கையின் காரணமாக உபயதாரர்கள் இதுவரை 920 கோடி ரூபாயை வழங்கி இருக்கின்றார்கள். திருக்கோயில் வாடகை நிலுவைத் தொகை 720 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கின்றது. அதேபோல் எந்த காலத்திலும் இல்லாத அளவிற்கு இந்து சமய அறநிலையத்துறைக்கு அரசு மானியமாக ரூ.900 கோடியை முதலமைச்சர் இதுவரையில் வழங்கி இருக்கின்றார். அதில் 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாக்க மட்டும் ரூ.300 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் வரை 1,855 கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. 66 ஆண்டுகளுக்கு பிறகு பாம்பன் சுவாமிகள் திருக்கோயிலுக்கும், 100 ஆண்டுகளுக்கு பிறகு திருச்சி மாவட்டம், பூர்த்தி கோவில் திருமுக்தீஸ்வரர் கோயிலுக்கும், பெரியபாளையம் பவானியம்மன் திருக்கோயிலுக்கும் வருகிற 12 ம் தேதி குடமுழுக்கு நடைபெற உள்ளது. இப்படி எண்ணற்ற திருப்பணிகளை மேற்கொண்டு பணியாற்றி வருகின்ற இந்து சமய அறநிலையத்துறைக்கு தமிழ்நாடு அரசு எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கி வருகிறது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மண்டல இணை ஆணையர் கி.ரேணுகாதேவி, மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் எம்.ஶ்ரீதர், சி.ஆனந்தி, கோயில் செயல் அலுவலர் கே.செந்தில் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

புதன்கிழமை,
ஜூலை 10, 2024

# விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் விறுவிறுப்பான வாக்குப்பதிவு 1 மணி நிலவரப்படி 50.95% ஓட்டுப்பதிவு

## வாக்குச்சாவடியில் பெண்ணுக்கு கத்திக்குத்து திமுக வேட்பாளர் அன்னியூர் சிவா குடும்பத்தோடு வாக்களித்தார்.



சென்னை, 10 ஜூலை 2024: விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு இன்று காலை 7 மணிக்கு தொடங்கி விறுவிறுப்பாக நடந்து வருகிறது. மதியம் 1 மணி நிலவரப்படி 50.95 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்தது.

விக்கிரவாண்டி தொகுதியில் 276 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அனைத்து வாக்குசாவடிகளிலும் வாக்குப்பதிவு நடப்பதை, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரி, தேர்தல் நடத்தும் அலுவலர் ஆகியோர் தங்கள் அலுவலகத்தில் இருந்து கண்காணிக்க, 'வெப் கேமரா'க்கள் பொருத்தப்பட்டுள்ளன. இது தவிர 110 வாக்குச்சாவடிகளில் வெளிப்பகுதியிலும் வெப் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதில் 44 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டு இருக்கிறது.

மிகவும் பதற்றமான வாக்குப்பதிவு மையங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள ராதாபுரம், குண்டலப்புலியூர், பனையபுரம் கிராமங்களில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

காலை வாக்குப்பதிவு தொடங்கியதும் 7.10 மணிக்கு அன்னியூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள 42 வது வாக்குச்சாவடியில் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா தனது மனைவி வனிதா மற்றும் தந்தையுடன் வந்து வாக்களித்தார்.

இதே போல் பனையபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வாக்குச்சாவடியில் பா.ம.க. வேட்பாளர் சி. அன்புமணி வாக்களித்தார்.

ஆரோக்கியமாக இருக்கிறேன்:

வாக்கு செலுத்திய பின் செய்தியாளர்களைச் சந்தித்த வேட்பாளர் சி. அன்புமணி, "காலையில் இருந்து 20 பூத்களுக்கு சென்றுவந்துள்ளேன். அந்த 20 பூத்தும் எனக்கு மிகவும் சாதமாக உள்ளது. சின்ன குறையோ, எந்த பிரச்சினையோ இல்லை. எங்களின் வெற்றி உறுதி. மக்களின் ஆதரவு அமோகமாக இருக்கிறது. வெளியூரை சேர்ந்த திமுக நிர்வாகிகள் இங்கு உள்ளனர். அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும். ஜனநாயக நாட்டில் பொதுமக்கள் கட்டாயமாக வாக்களிக்க வேண்டும். வாக்களிக்க தவறினால் தங்களின் உரிமையை இழப்பதற்கு சமம். எனக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதாக கூறுவது தவறு. ஆரோக்கியமாக இருக்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் கோளாறு ஏற்பட்டதால் ஒட்டன் காடுவெட்டி, கானை வாக்குச்சாவடிகளில் 1 மணி நேரமும், கருங்காலிப்பட்டு, கல்பட்டு, மாம்பழப்பட்டு, பொன்னங்குப்பம் ஆகிய வாக்குச்சாவடியில் 30 நிமிடங்களும் தாமதமாக வாக்குப்பதிவு துவங்கியது.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ள வயர் பழுதானதால் சிறிது நேர தாமதத்துக்கு பின் பழுதுகள் சரிசெய்யப்பட்டு மாம்பழப்பட்டு வாக்குச்சாவடியில் வாக்குப்பதிவு தொடங்கியது. விக்கிரவாண்டி மேல்நிலைப்பள்ளி வாக்குச்சாவடியில் குளவிக்கூட்டால் வாக்குப்பதிவின் போது இடையூறு ஏற்பட்டது. எனினும், பல இடங்களில் வாக்குப்பதிவு விறுவிறுப்புடன் நடந்து வருகிறது.

வாக்குப்பதிவு நிறைவடைந்த பின் மின்னணு வாக்குப்பதிவு யந்திரங்கள் சீல் வைக்கப்பட்டு, போலீஸ் பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையமான பனையபுரத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிக்கு கொண்டு செல்லப்படும். அங்குள்ள அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு 13ந் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. இந்த தேர்தலோடு 6 மாநிலங்களில் 12 சட்டமன்ற தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் இன்று நடந்தது.

காலை 11 மணி நிலவரப்படி 30 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்தது. 1 மணி நிலவரப்படி 50.95 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்தது.

விக்கிரவாண்டி அருகே அன்னியூரை அடுத்த கொசப்பாளையத்தை சேர்ந்தவர் கனிமொழி (வயது42) இவரது கணவர் இறந்து விட்ட நிலையில் ஏழுமலை என்பவருடன் கனிமொழிக்கு பழக்கம் ஏற்பட்டது. பின்னர் திருமணம் செய்யாமலேயே இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தனர். இதற்கிடையே கனிமொழிக்கு மற்றொருவருடன் தொடர்பு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதனை அறிந்த ஏழுமலை கனிமொழியை கண்டித்து வந்ததாக தெரிகிறது. ஆனால் கனிமொழி தொடர்பை கைவிடவில்லை என கூறப்படுகிறது. இதனால் கனிமொழி மீது ஏழுமலை ஆத்திரத்தில் இருந்து வந்தார்.

இந்நிலையில் விக்கிரவாண்டி இடைத்தேர்தலையொட்டி கனிமொழி கொசபாளையத்தில் உள்ள வாக்குச்சாவடியில் இன்று காலை 11.30 மணியளவில் வாக்களிக்க வரிசையில் நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த ஏழுமலை மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து கனிமொழியை சரமாரியாக குத்திவிட்டு தப்பி ஓடிவிட்டார். இதில் ரத்த வெள்ளத்தில் சரிந்த கனிமொழியை அங்கிருந்தவர்கள் மீட்டு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு கனிமொழிக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. வாக்குசாவடியில் வாக்களிக்க வந்த பெண்ணை கத்தியால் குத்திய சம்பவம் அப்பகுதியில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பரபரப்பாக இன்று வாக்குப்பதிவு நடந்து வரும் நிலையில் இரட்டை கொலை வழக்கில் சிறை சென்று வந்த நிலையில் மனைவி கனிமொழியை பல ஆண்டுகளாக பிரிந்து வாழ்ந்து வந்துள்ளார் ஏழுமலை. மனைவி வேறொரு ஊரில் வாழ்ந்து வந்தார்.

இந்நிலையில் இடைத்தேர்தலில் வாக்களிப்பதற்காக சொந்த ஊருக்கு கனிமொழி வந்த நிலையில், இந்த கத்திக்குத்து சம்பவம் நிகழ்ந்துள்ளது.

# ஜே.சி.பி. வாகனங்களுடன் முற்றுகை கப்பலூர் சுங்கச்சாவடியை மூடக்கோரி போராட்டம்: ஆர்.பி. உதயகுமார் உள்பட அ.தி.மு.க. வினர் கைது எடப்பாடி பழனிசாமி கண்டனம்



சென்னை, 10 ஜூலை 2024: கப்பலூர் சுங்கச்சாவடியை மூடக்கோரி அண்ணா தி.மு.க. சார்பில் இன்று முற்றுகை போராட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட ஆர்.பி. உதயகுமார் உள்பட ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர்.

ஆர்.பி.உதயகுமார் கைது செய்யப்பட்டதற்கு அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

தென்தமிழகத்தின் நுழைவுப் பகுதியான மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதி கப்பலூரில் டோல்கேட் அமைக்கப்பட்டுள்ளது. இதை அகற்ற வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. இந்த நிலையில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கப்பலூர் டோல்கேட்டை மூடக்கோரி தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார். முற்றுகை போராட்டத்திலும் ஈடுபட்டார்.

இதற்கிடையே கடந்த வாரம் உள்ளூர் பகுதி மக்களின் வாகனங்களுக்கு கட்டணம் அதிகரிக்கப்பட்டது. அப்போது மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியது. இந்தநிலையில் பல்வேறு அமைப்புகள் கப்பலூர் சுங்கச்சாவடியை அகற்ற வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். பொதுமக்களும் தொடர்ந்து சுங்கச்சாவடிக்கு எதிராக எதிர்ப்பு குரல் எழுப்பி வருகிறார்கள்.

இந்த நிலையில் முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான ஆர்.பி.உதயகுமார் தலைமையில் ஏராளமான அ.தி.மு.க.வினர் மற்றும் பொதுமக்கள் ஆயிரக்கணக்கானோர் இன்று கப்பலூர் டோல்கேட்டில் தரையில் அமர்ந்து முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது டோல்கேட்டை மூட வலியுறுத்தியும், உள்ளூர் வாகனங்களை கட்டணம் இன்றி அனுமதிக்க வேண்டும் என்றும் கோஷங்களை எழுப்பினர். இதில் முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் சரவணன், மாணிக்கம், டாக்டர் சரவணன், மகேந்திரன், தமிழரசன், பேரவை மாநில துணைச் செயலாளர் வெற்றிவேல் மற்றும் நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர். அப்போது சுங்கச்சாவடியை இடிக்க ஜேசிபி வாகனங்களுடன் போராட்டக்காரர்கள் வந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஜேசிபியுடன் வந்த போராட்டக்காரர்களை போலீசார் தடுத்து நிறுத்தினர்.

அண்ணா தி.மு.க.வினரின் முற்றுகை போராட்டம் காரணமாக கன்னியாகுமரி முக்கிய நெடுஞ்சாலையான கப்பலூர் டோல்கேட் பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதையடுத்து போலீசார் விரைந்து சென்று முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனாலும் தொடர்ந்து போராட்டம் நடைபெற்றதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. போலீசார் பலமுறை பேச்சு வார்த்தை நடத்தியும் போராட்டம் கைவிடப்படாததால் முன்னாள் அமைச்சர் ஆர்பி உதயகுமார் உள்ளிட்டோரை போலீசார் கைது செய்து, காவல் வாகனத்தில் ஏற்றி அழைத்துச் சென்றனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கூறியதாவது:-

கப்பலூர் டோல்கேட் விவகாரத்தில் மூன்று ஆண்டுகள் ஆகியும் கொடுத்த வாக்குறுதியை பற்றி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தற்போது வாய் திறக்க மறுத்து வருகிறார். நாங்கள் போராடினால் எங்கள் மீது பொய் வழக்கு தொடுத்து கைது செய்யும் சூழ்நிலை உள்ளது. தற்போது உள்ளூர் வாகனங்களுக்கு ரூ.2 லட்சம் முதல் ரூ.12 லட்சம் வரை அபராதம் விதித்து நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. உள்ளூர் வாகனங்கள் 50 சதவீத கட்டணத்துடன் செல்ல வேண்டும் என்று சொல்கிறார்கள். இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். இந்த நடவடிக்கை அனைத்து மக்களும் போராட தூண்டும் வகையில் உள்ளது. இதே எடப்பாடியார் ஆட்சி காலத்தில் மத்திய அரசிடம் பேசி உள்ளூர் வாகனங்களுக்கு கட்டண சலுகை அளிக்கப்பட்டது. எனவே டோல்கேட்டை முற்றிலும் அகற்றவேண்டும் என்று அனைத்து தரப்பு மக்கள், தொழிலாளர்கள், பல்வேறு சங்கங்கள், தொழில் நிறுவனங்கள் ஆகியோர் வலியுறுத்தி வருகின்றனர். கடையடைப்பு போராட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றது.

இந்த அரசு மக்கள் பிரச்சனையில் அக்கறை செலுத்தவில்லை. மத்திய அரசு ஏற்கனவே 60 கிலோமீட்டர் உள்ள டோல்கேட்டுகள் அகற்றப்படும் என்று கூறியுள்ளார்கள். அதை பயன்படுத்தி மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து செய்திருக்க வேண்டும், ஆனால் அதை அரசு செய்யவில்லை. எடப்பாடியார் இருக்கும்பொழுது டோல்கேட்டில் பணியாற்றிய ஊழியர்களுக்கு கவுன்சிலிங் கொடுக்கப்பட்டது. அதன் மூலம் மக்களிடத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று பயிற்சி அளிக்கப்பட்டது. தற்போது அந்த போதிய பயிற்சி அளிக்கப்படவில்லை. இதனால் தினந்தோறும் பிரச்சனைகள் ஏற்படுகிறது. மக்களுக்கு சேவை செய்யாமல் லாப நோக்கத்துடன் தான் தற்போது இயங்கி வருகிறது. கப்பலூர் டோல்கேட்டை அகற்ற பலமுறை அரசுக்கு கவனத்திற்கு எடுத்துச் சென்றும் இன்னமும் தீர்வு காணப்படவில்லை. இந்த பிரச்சனையில் எடப்பாடியாரிடம் அனுமதி பெற்று மக்களுடன் இணைந்து போராடி வருகிறோம். அடக்குமுறைக்கு அஞ்சாமல் எங்கள் போராட்டம் தொடரும். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிலையில் ஆர்.பி.உதயகுமார் கைதுக்கு அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

மதுரை திருமங்கலம் பகுதியில் அமைந்துள்ள கப்பலூர் சுங்கச்சாவடி விதிமுறைகளுக்கு புறம்பாக அமைக்கப்பட்டுள்ளதற்கு உள்ளூர் மக்கள் எதிர்ப்பு தெரிவித்து, அதனை அகற்றக் கோரி பலமுறை முற்றுகை போராட்டம் நடத்தியுள்ளனர். 2024-ம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அறிக்கையில் (பக்கம் 27), சுங்கச்சாவடிகள் அகற்றப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்தது. எனவே அப்பகுதி மக்களுடன் இணைந்து கப்பலூர் சுங்கச் சாவடியை அகற்ற வேண்டும் என்றும், மற்றும் உள்ளூர் மக்கள் வாகனங்களில் செல்லும்போது அவர்களுக்கு முழு கட்டண விலக்கு அளிக்க வேண்டுமென்றும் அமைதியான முறையில் எதிர்ப்பை தெரிவித்து போராடிய அண்ணா தி.மு.க. புரட்சித்தலைவி அம்மா பேரவையின் செயலாளரும், மதுரை புறநகர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சி துணைத்தலைவருமான, ஆர். பி. உதயகுமாரையும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களையும், கழக நிர்வாகிகளையும், தொண்டர்களையும், பொதுமக்களையும் கைது செய்துள்ள தி.மு.க. அரசிற்கு எனது கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பகுதி மக்களின் கோரிக்கையினை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றும், கைதுசெய்துள்ள கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களை உடனடியாக விடுவிக்குமாறும் இந்த அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# விஜ போஸ்ட்பெய்ட் வாடிக்கையாளர்களுக்காக புத்தம் புதிய ரெட்எக்ஸ் திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது! நெட்ஃப்ளிக்ஸ் உடன் இன்னும் ஏராளமான சலுகைகளை வழங்குகிறது!!

சென்னை, 10 ஜூலை 2024: இந்தியாவின் முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனங்களில் ஒன்றானன விஜ, தனது போஸ்ட்பெய்ட் வாடிக்கையாளர்களுக்காக முற்றிலும் புதிய ரெட்எக்ஸ் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த புதிய திட்டம், பிரத்தியேகமான பலன்களுடன் ஈடு இணையற்ற இணைப்பின் ப்ரீமியம் போஸ்ட்பெய்ட் அனுபவத்தை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. புதுப்பிக்கப்பட்ட இத்திட்டம் உலகளாவிய ஸ்ட்ரீமிங் சேவைகளை வழங்கி வரும் புகழ்பெற்ற நெட்ஃப்ளிக்ஸ் ஒடிடி-யை கண்டுகளிக்கும் வாய்ப்பை அளிக்கிறது. இதன் மூலம் விஜ, தனது வாடிக்கையாளர்களுக்கு அளித்து வரும் பொழுதுபோக்கு சலுகைகளை மேலும் வலுப்படுத்துகிறது. இந்த கூட்டு செயல்பாட்டின் மூலம், விஜ போஸ்பெய்ட் வாடிக்கையாளர்கள் தங்கள் விருப்பப்படி மொபைல் அல்லது தொலைக்காட்சி எந்த சாதனத்திலும் மிகச்சிறப்பான ஸ்ட்ரீமிங் அனுபவத்துடன் உலகத் தரம் வாய்ந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை கண்டுகளிக்க முடியும்.

இன்றைய நவீன வாழ்க்கை முறைகளுக்கு ஏற்ற வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட, மேம்படுத்தப்பட்ட புதிய ரெட்எக்ஸ் திட்டமானது, பொழுதுபோக்கு, உணவு, பயணம், பாதுகாப்பு மற்றும் முன்னுரிமை வாடிக்கையாளர் சேவை ஆகிய அம்சங்களை ஒருங்கிணைத்து வழங்குகிறது. இவை அனைத்தும் வெறும் ரூ. 1201 சந்தாவுடன் வழங்கப்படுகிறது. புதிய ரெட்எக்ஸ் திட்டம், வாடிக்கையாளர்களுக்கு சௌகரியம் மற்றும் வசதி, பொழுதுபோக்கு அம்சங்கள், மற்றும் பாதுகாப்பு என இவை அனைத்தையும் ஒரே திட்டத்தில் வழங்குவது குறிப்பிடத்தக்கது.

நெட்ஃப்ளிக்ஸ் உடன் அசத்தலான ஒடிடி ஸ்ட்ரீமிங்: நெட்ஃப்ளிக்ஸ் உட்பட ஐந்து ஒடிடி இயங்குதளங்களை (மொபைல் + டிவி) கண்டுகளிக்கும் வாய்ப்பை வழங்கும் ஒரே போஸ்ட்பெய்ட் திட்டம். அமேசான் ப்ரைம், டிஸ்னி+ ஹாட்ஸ்டார், சோனி லைவ் மற்றும் சன் நெக்ஸ்ட் என மேலும் 5 ஒடிடி தளங்களைப் பார்த்து ரசிக்கமுடியும். இந்த கூட்டு செயல்பாட்டின் மூலம், விஜ போஸ்பெய்ட் வாடிக்கையாளர்கள் தங்களுக்குப் பிடித்த சிறந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை மட்டுமில்லாமல், நேரடி விளையாட்டு போட்டிகளையும் கண்டு ரசிக்கலாம். அதிலும் குறிப்பாக சோனி லைவ்-ல் நடந்து வரும் யூரோ கோப்பை போட்டிகளையும் உற்சாகத்துடன் பார்க்கும் வாய்ப்பையும் அளிக்கிறது.

ஸ்விக்கி ஒன் உறுப்பினராகும் வாய்ப்பு: 6 மாதங்களுக்கு எந்தவித கட்டணமு இல்லாமல் ஸ்விக்கின் ஒன் உறுப்பினராகும் வாய்ப்பினைப் பெறுங்கள். உங்கள் உணவு/இன்ஸ்டாமார்ட் ஆர்டர்களில் ரூ.199-க்கு மேல் இலவச டெலிவரிகளை இனி பெறலாம்.. மேலும் ஸ்விக்கி டைன்அவுட்/ஜீனி மூலம் அற்புதமான தள்ளுபடி சலுகைகளைப் பெறுங்கள்.

சர்வதேச ரோமிங் & விமான நிலையங்களில் விஐபி லவுஞ்ச் பயன்படுத்தும் வாய்ப்பு: ரெட்எக்ஸ் திட்டத்தில் வருடத்திற்கு ஒருமுறை, ரூ. 2999 மதிப்புள்ள 7-நாள் சர்வதேச ரோமிங் பேக் உள்ளது. மேலும், உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான நிலைய ஓய்வறைகளைப் பயன்படுத்துவதற்கான வசதி (ஒரு சர்வதேச விமான நிலைய லவுஞ்ச் உட்பட ஆண்டுக்கு 4 முறை வரை), மற்றும் விமான முன்பதிவுகளில் பிரத்தியேக ஈஸ்மைட்ரிப் தள்ளுபடிகள் வழங்கப்படுகின்றன.

சாதனப் பாதுகாப்பு: நார்டன் மொபைல் செக்யூட்டி-ன் சேவையை 12 மாதங்களுக்கு இலவசமாக பயன்படுத்து வாய்ப்பு.

முன்னுரிமை சேவைகள்: விஜ வாடிக்கையாளர்கள் புதிய ரெட்எக்ஸ் திட்டத்துடன் ப்ரீமியம் வாடிக்கையாளர் சேவை அனுபவத்தைப் பெறலாம், இதில் விஜ ஸ்டோர்களில் பிரத்தியேக முன்னுரிமை டெஸ்க் மற்றும் விரைவான விசாரணை மற்றும் தீர்வுக்கான சிறந்த கால் சென்டர் முகவர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பு ஆகியவையும் அடங்கும்.

ரெட்எக்ஸ் திட்டம் வழங்கும் பிரத்தியேகமான அனுபவத்தை அனுபவிக்க, விஜ வெப்/ஆப் இல் உள்நுழையவும் அல்லது அருகிலுள்ள விஜ ஸ்டோர்- க்கு செல்லவும். மேலும் கூடுதல் தகவல்கள் பற்றி அறிய, https://www.my???.in/postpaid/??????? ? ? <https://www.myvi.in/postpaid/redx> என்ற இடுகையை சொடுக்கவும்.

# லண்டனில் நடைபெற்ற சர்வதேச கடல்சார் அமைப்பின் கூட்டத்தில் இந்திய உயர்நிலைக்குழு பங்கேற்பு




சென்னை, 10 ஜூலை 2024: பருவமழை தொடங்கியுள்ள நிலையில், டெங்குக்காய்ச்சல் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு நாடு முழுவதும் டெங்கு நிலவரம் குறித்தும், நோய் தடுப்பு, கட்டுப்பாடு, மேலாண்மைக்கான தயார்நிலை குறித்தும் ஆய்வு செய்வதற்காக புதுதில்லியில் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு ஜகத் பிரகாஷ் நட்டா தலைமையில் உயர்நிலை ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நாடு தழுவிய அளவில் டெங்கு நிலைமை குறித்தும், மத்திய சுகாதார அமைச்சகத்தின் தயார்நிலை குறித்தும் அமைச்சருக்கு விளக்கப்பட்டது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், சரியான நேரத்தில் நோய் கண்டறிதல் ஆகியவற்றின் காரணமாக டெங்கு நோயாளிகளின் இறப்பு விகிதம் இந்த ஆண்டில் 0.1 சதவீதமாக குறைந்துள்ளதாக இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் பேசிய அமைச்சர் பருவமழை தொடங்கியுள்ள நிலையில், டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் உள்ளதை சுட்டிக்காட்டினார். டெங்குவை கட்டுப்படுத்த தயார் நிலையில் இருக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். டெங்குவுக்கு எதிரான தடுப்பு, கட்டுப்பாடு, நோய் மேலாண்மை நடவடிக்கைகளை முடுக்கி விடவும் வலுப்படுத்தவும் அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

நோய்ப்பரவல் அதிகமாகப் பதிவாகும் மாநிலங்களில் தீவிரக் கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு திரு ஜே பி நட்டா வலியுறுத்தினார். டெங்கு தடுப்பு தொடர்பாக மாநிலங்களுடன் இணைந்து பணியாற்றுமாறு மத்திய சுகாதாரத்துறை அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

டெங்கு நோய் தடுப்பு, நோய் அறிகுறிகள், சிகிச்சை நடைமுறைகள் குறித்த மக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க, டெங்கு தடுப்பு, விழிப்புணர்வுக்காக 24 மணி நேரமும் செயல்படும் உதவி தொலைபேசி எண்ணை உருவாக்கி செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

# ருஷில் டெக்கார் லிமிடெட் இயக்குநர் குழு 1:10 விகிதத்தில் பங்கு பிரிப்பதற்கான பதிவு தேதியாக ஆகஸ்ட் 09 நிர்ணயம்

சென்னை, 10 ஜூலை 2024: சுற்றுச்சூழலுக்கு உகந்த எம் டி எஃப், லேமினேட்கள் மற்றும் ப்ளைவுட் தயாரிப்பில் ஒரு முக்கியப் பெயரான ருஷில் டெக்கார் லிமிடெட், 1:10 என்ற விகிதத்தில் பங்குகளைப் பிரிப்பதற்கான ஒப்புதலை இயக்குனர்கள் குழு சமீபத்தில் வழங்கியிருந்தது. அதன் அடிப்படையில், தனது 1:10 பங்கு பிரிப்பிற்கான, அதாவது. ரூ. 10 முக மதிப்பு கொண்ட ஒவ்வொரு ஈக்விட்டி பங்கை, ரூ. 1 முக மதிப்பு கொண்ட 10 ஈக்விட்டி பங்குகளாகப் பிரிப்பதற்கான செயல்முறையின் பதிவு தேதியாக 2024 ஆகஸ்ட் 9 - ஐ இயக்குனர் குழு நிர்ணயித்திருப்பதை இந்நிறுவனம் அறிவித்திருக்கிறது. முன்னதாக, தென் அமெரிக்காவில் தனது உத்தி ரீதியான விரிவாக்கத்தை மேற்கொள்வதை இந்நிறுவனம் அறிவித்திருந்தது. ஏற்கனவே 50 நாடுகளுக்கு மேல் ஏற்றுமதிகளை மேற்கொண்டுவரும் நிலையில், ருஷில் டெக்கார் லிமிடெட் உலகளவில் எம் டி எஃப்-க்கான மிகப்பெரிய சந்தைகளில் ஒன்றினுள் நுழையவிருக்கிறது. இன்டர்ஸம் பொகோட்டா என்பது, கண்காட்சி நிகழ்விற்கு முன்னதாக பேசிய ருஷில் டெக்கார் லிமிடெட்டின் நிர்வாக இயக்குநர் திரு. ருஷில் தக்கர், பல பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள உலகளாவிய உட்பேனல் சந்தையில் வளர்ச்சியடைவதற்கான எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் தெரிவித்தார். இன்டர்ஸம் பொகோட்டா என்பது ஃபர்னிச்சர் மற்றும் மரத் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச தொழில்துறைக் கண்காட்சியாகும். இது மே 14 மற்றும் 17-க்கு இடையில் தென் அமெரிக்காவின் கொலம்பியாவில் நடைபெறுகிறது.

இந்தியாவில் எம் டி எஃப் உற்பத்தியில் முன்னணியில் உள்ள ருஷில் டெக்கார், தென் அமெரிக்காவில் உள்ள அதிகளவிலான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சிறந்த திறன் கொண்டதாக உள்ளது. சமீபத்தில், 2024 ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில், இந்நிறுவனம் கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 9% வளர்ச்சியைப் பதிவு செய்தது. எஃப் ஒய்24-இன் நான்காவது காலாண்டில் ஏற்றுமதி வருவாய் மொத்த வருவாயில் 28% பங்காக இருந்தது. இது நிறுவனம் சர்வதேச அளவில் குறிப்பிடத்தக்க வகையில் தடம் பதித்துள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறது. ப்ரிஸிஷன் அறிக்கைகளின்படி, உலகளாவிய எம் டி எஃப் சந்தை 2024-இல் 24,942.77 மில்லியன் அமெரிக்க டாலர் என மதிப்பிடப்பட்டிருந்தது. மேலும், இது 2027-இல் 29,965.13 மில்லியன் டாலர் மதிப்பை எட்டும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

ருஷில் டெக்காரின் உத்தி ரீதியான விரிவாக்கமானது, 2029-ஆம் ஆண்டிற்குள் 2500 கோடி ரூபாய் வருடாந்திர வருவாயை அடைவதற்கான அதன் பரந்த நோக்கத்தின் ஒரு பகுதியாகும். அதிநவீன உற்பத்தி வசதிகள் மற்றும் வலுவான விநியோக வலைப் பிணைய அமைப்பைக் கொண்டு, நிதிசார்ந்த ஸ்திரத்தன்மையையும் செயல்பாட்டுத் திறனையும் பராமரித்தவாறே, உலகளாவிய சந்தையின் அதிகரித்து வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய நிறுவனம் தயாராக உள்ளது.


# லண்டனில் நடைபெற்ற சர்வதேச கடல்சார் அமைப்பின் கூட்டத்தில் இந்திய உயர்நிலைக்குழு பங்கேற்பு




சென்னை, 10 ஜூலை 2024: லண்டனில் நடைபெறும் சர்வதேச கடல்சார் அமைப்பின் (ஐஎம்ஓ) 132-வது கூட்ட அமர்வில், துறைமுகங்கள், கப்பல், நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் செயலாளர் திரு டி.கே.ராமச்சந்திரன் தலைமையிலான உயர்மட்ட இந்தியக்குழு பங்கேற்றுள்ளது. சர்வதேச கடல்வழி வர்த்தகத்தில் அதிக ஆர்வம் கொண்ட நாடுகளின் பிரிவில் ஐ.எம்.ஓ கவுன்சிலின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக இந்தியா உள்ளது.

கூட்டத்தில் பேசிய கப்பல் துறைச் செயலாளர் திரு டி.கே.ராமச்சந்திரன், மாலுமிகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும், கடல்சார் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் இந்தியா ஆழ்ந்த உறுதிப்பாட்டுடன் உள்ளது என்றார். சுற்றுச்சூழல் ரீதியாக நிலையான கடல்சார் நடைமுறைகளை ஊக்குவிப்பதில் இந்தியா சிறப்பாக பணியாற்றி வருகிறது என்று அவர் கூறினார். கடல்சார் துறையில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த உலக அளவில் ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியா தயாராக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

2024 ஜூலை 8 அன்று தொடங்கிய ஐஎம்ஓ கவுன்சிலின் 132-வது அமர்வு, 2024 ஜூலை 12 வரை நடைபெறுகிறது. உலக அளவில் சிறந்த கடல்சார் நடவடிக்கைகள், எதிர்கால உத்திகள் போன்றவை குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

# மாபெரும் சீரமைப்பு முன்முயற்சியால் திருநீர்மலை சித்தேரி ஏரி புதுப்பொலிவு பெற்றுள்ளது

சென்னை, 10 ஜூலை 2024: மாபெரும் சீரமைப்பு முன்முயற்சியால் திருநீர்மலை சித்தேரி ஏரி புதுப்பொலிவு பெற்றுள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. புனரமைப்பு பணிகளை செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திரு எஸ் அருண்ராஜ், சிறப்பு பொருளாதார மண்டலத்தின் (மெப்ஸ்) மேம்பாட்டு ஆணையர் திரு அலெக்ஸ் பால் மேனன் ஆகியோர் தொடங்கிவைத்தனர்.

தாம்பரத்தில் உள்ள மெப்ஸ், இந்திய சுற்றுச்சூழல் அறக்கட்டளை (இஎஃப்ஐ) ஆகியவை இணைந்து இந்தப் புனரமைப்புப் பணியை மேற்கொண்டன. ஏரியின் நீர்ப்பிடிப்பு பரப்பை அதிகரிப்பதும், உள்ளூர் சுற்றுச்சூழலுக்கு உதவி செய்வதும் இந்தப்பணியின் நோக்கமாகும். இதற்காக ஏரியை தூர்வாறுதல், கரைகளை உயர்த்துதல், உள்ளூர் பறவைகளுக்கு உதவ தங்குமிடங்களை அமைத்தல், நிலத்தடி நீர் அதிகரிப்புக்காக கசிவு நீர் பகுதிகளை அமைத்தல், பல்லுயிர் பெருக்கத்தை ஊக்குவிக்க மரக்கன்றுகளை நடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இஎஃப்ஐ மூலம் ரூ. 50 லட்சம் முதலீட்டுடன் இந்தப் புனரமைப்புப் பணிகளை 85 நாட்களில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணி வெற்றிகரமாக நிறைவடையும்போது, இந்தப்பகுதியின் சுற்றுச்சூழல் மீட்பில் மிகப்பெரும் சாதனையாக அமையும். மேலும் இந்தப் பகுதி மக்களுக்கும், வனவிலங்குகளுக்கும் மிக முக்கியமான ஆதார வளமாக திருநீர்மலை சித்தேரி ஏரி விளங்கும்.

# அமெரிக்க– இந்திய வர்த்தக கவுன்சிலின் தூதுக்குழு மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்கை சந்தித்தது



சென்னை, 10 ஜூலை 2024: அமெரிக்க-இந்தியா வர்த்தக கவுன்சிலின் தூதுக்குழு, அதன் செயல் துணைத் தலைவர் திரு எட்வர்ட் நைட் தலைமையில் மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்கை இன்று புதுதில்லியில் சந்தித்து பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து விவாதித்தது.

இக்குழு இரு நாடுகளிலும் உள்ள தொழில் துறையினருக்கும், அரசுக்கும் ஒத்துழைப்பை ஏற்படுத்தும் வகையில் செயல்படுகிறது. இது சுமார் 200 நிறுவனங்களை உறுப்பினராகக் கொண்டுள்ளது. அவற்றில் 70 சதவீதம் அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனங்களாகவும், 30 சதவீதம் இந்தியாவைச் சேர்ந்தவையாகவும் உள்ளன.

இந்த சந்திப்பின் போது பேசிய மத்திய அறிவியல், தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் குவாண்டம் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றில் இந்தியா சிறந்த முன்னேற்றம் அடைந்து வருவதாக தெரிவித்தார். முக்கிய உலோகங்கள், குறைக்கடத்திகள் உள்ளிட்ட தொழில் துறைகளில் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான ஒத்துழைப்பு அதிகரித்துள்ளதாக அவர் கூறினார். இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மின்கலம் (பேட்டரி) பசுமை தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றில் கூட்டுத் தொழில் திட்டங்களை செயல்படுத்த அதிக வாய்ப்பு உள்ளதாக அவர் தெரிவித்தார்.

அறிவியல், தொழில்நுட்பத்தில் கடந்த பத்தாண்டுகளில் இந்தியா நல்ல முன்னேற்றத்தை எட்டியிருப்பதாக அவர் குறிப்பிட்டார். இந்தியாவில் 4,000-க்கும் அதிகமான உயிரி தொழில்நுட்ப நிறுவனங்களை இந்தியா கொண்டுள்ளது என்றும் இவற்றின் வர்த்தகம் 140 பில்லியன் டாலரை எட்டியுள்ளது எனவும் அவர் எடுத்துரைத்தார். அறிவியல், தொழில்நுட்பத் துறையின் செயலாளர் டாக்டர் அபய் கரண்டிகர் உயிரி தொழில்நுட்பத்துறை செயலாளர் டாக்டர் ராஜேஷ் கோகலே, சிஎஸ்ஐஆர் தலைமை இயக்குநர் டாக்டர் என். கலைச்செல்வி உள்ளிட்டோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

# சென்னை விமான நிலைய சுங்கத்துறையினர் ரூ.1.11 கோடி மதிப்பிலான வெளிநாட்டுப் பண நோட்டுகளைப் பறிமுதல் செய்துள்ளனர்




சென்னை, 10 ஜூலை 2024: சென்னை சர்வதேச விமான நிலையத்திலிருந்து பாங்காக்கிற்குப் பயணம் செய்ய 06.07.2024 அன்று 2 பயணிகள் விமானத்தில் ஏறியபோது சுங்கத்துறையினர் இடைமறித்து அவர்களின் உடைமைகளை பரிசோதித்து விசாரணை நடத்தியபோது அமெரிக்க டாலர், சவூதி ரியால் நோட்டுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவற்றின் மதிப்பு ரூ.1.11 கோடியாகும். இந்த வெளிநாட்டு நோட்டுகளை இந்தியாவில் இருந்து கடத்த இவர்கள் முயற்சி செய்ததை அடுத்து இவர்களிடமிருந்து வெளிநாட்டுப் பண நோட்டுகளை சுங்கத்துறையினர் பறிமுதல் செய்தனர். இரண்டு பயணிகளும் கைது செய்யப்பட்டு சென்னை புழலில் உள்ள மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

# புதுச்சேரி தேசிய தொழில்நுட்பக் கழகத்தில் உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்பட்டது



சென்னை, 10 ஜூலை 2024: காரைக்காலில் அமைந்துள்ள தேசிய தொழில்நுட்பக் கழகம் புதுச்சேரியில் "உலக சுற்றுச்சூழல் தினம்" இன்று காலை (10.07.2024) கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியை தேசிய தொழில்நுட்பக் கழகம் புதுச்சேரியும், இன்ஸ்டிடியூஷன் ஆஃப் இன்ஜினியர்ஸ் (இந்தியா) புதுச்சேரி மாநில மையமும் இனைந்து நடத்தியது. இந்த ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினமானது "எங்கள் நிலம் எங்கள் எதிர்காலம்" என்ற தலைப்பை மையமாகக்கொண்டு கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக புதுச்சேரி மின்சாரத் துறை செயல் பொறியாளர் கே கே விமல் குமார், முனைவர். எஸ். திருஞானம், தலைவர், இன்ஸ்டிடியூஷன் ஆஃப் இன்ஜினியர்ஸ் (இந்தியா) புதுச்சேரி மாநில மையத்தின் தலைவர் முனைவர் எஸ். திருஞானம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய கழகத்தின் இயக்குனர் முனைவர். மகரந்த் மாதவ் காங்ரேகர் வருங்கால சந்ததியினருக்காக சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும், இன்று நாம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சுற்றுச்சூழல் சவால்கள் குறித்தும் பேசினார். மேலும் அவர் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்வதில் ஆரோக்கியமான சூழலின் முக்கியப் பங்கையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகளில் பங்களிப்பதில் இளநிலை, முதுநிலை மாணவர்களின் பொறுப்பையும், இன்றைய மாணவர்களே நாளைய தலைவர்கள் என்றும், நிலையான நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும், பசுமை தொழில்நுட்பங்களை புதுமைப்படுத்த வேண்டும், சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை பரப்ப வேண்டும் என்றும் அவர் கூறினார்.

சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கே கே விமல் குமார் மின்சார உற்பத்திக்கு சூரிய சக்தியைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் சுற்றுச்சூழலுக்கு அதன் தாக்கத்தையும் குறித்துப் பேசினார். கௌரவ விருந்தினராக கலந்துகொண்ட முனைவர். எஸ். திருஞானம் பசுமை கட்டிடங்களின் முக்கியத்துவத்தையும் சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் அவற்றின் பங்கையும் குறித்து எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியின் இறுதியாக உலக சுற்றுச்சுழல் தின விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட சுவரொட்டி தயாரிக்கும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பிரதிநிதிகள் பரிசுகளை வழங்கினார்கள்.

# மேடம் பிரிட்ஜெர்டன் கலெக்ஷனை அறிமுகப்படுத்துகிறார், நெட்ஃபிக்ஸ் ரீஜென்சியை சமகால ஃபேஷனுடன் இணைத்தார்




சென்னை, 10 ஜூலை 2024: பெங்களூரு, ஜூலை, 2024- பிரீமியம் மகளிர் ஆடை பேஷன் பிராண்டான மேடம், ஷோண்டலேண்டுடனான தனது ஒத்துழைப்பை ழிமீமீயீறீவீஜ் இல் வெளியிட்டதன் மூலம் அதன் வாடிக்கையாளர்களுக்கு மற்றொரு சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது; இந்த பிராண்ட் மிகவும் பிரபலமான பிரிட்ஜெர்டன் தொடரால் ஈர்க்கப்பட்டு அவர்களின் சமீபத்திய காப்ஸ்யூல் சேகரிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. பிரிட்ஜெர்டனின் சீசன் 3 வெளியீட்டிற்குப் பிறகு இந்த அறிவிப்பு வந்துள்ளது. அதன் வகைகளில் ஒன்று, இந்த ஒத்துழைப்பு பிராண்டின் சமகால கவர்ச்சியுடன் இணைந்த ஐரோப்பிய நேர்த்தியின் கொண்டாட்டத்தைக் குறிக்கிறது. பிரிட்ஜெர்டன் சீரிஸ் அதன் பார்வையாளர்களிடையே பற்றவைத்துள்ளது, எம்ப்ராய்டரி செய்யப்பட்ட ஆடைகள், பேரரசு இடுப்பு, படிக வேலைப்பாடுகள், மலர் வடிவங்கள், ஆடம்பரமான துணிகள், கோர்செட்டுகள், பாய்ந்தோடிய காட்டன் கவுன்கள் போன்ற ரீகல் உறுப்புகளுக்கு மீண்டும் விருப்பம் ஏற்பட்டது. இந்த ரீஜென்சி ஃபேஷன் ஆசைகளை சமகால திருப்பத்துடன் பூர்த்தி செய்ய அதன் வாடிக்கையாளர்களுக்கு பிரத்தியேகமாக சேகரிப்பு. வரம்புக்குட்பட்ட பதிப்பு பாணிகளைக் கொண்டிருக்கும், ஒவ்வொரு பகுதியும் வரலாற்று சிறப்பை நினைவூட்டும் ஒரு ஆடம்பர உணர்வை வெளிப்படுத்துகிறது.

பிரீமியம் துணிகளில் அழகான ஏ-லைன் சில்ஹவுட்டுகளால் அலங்கரிக்கப்பட்ட ஆடைகள் மற்றும் தோட்ட விருந்துகள், சோரிகள் மற்றும் மாலை நிகழ்வுகளுக்கு ஏற்றவாறு மென்மையான மலர் அச்சிட்டுகள் வழங்கப்படுகின்றன. சாதாரண உடைகளில், டீ-ஷர்ட்டுகள் தங்க நிற அச்சுக்கலை மற்றும் ரைன்ஸ்டோன் போன்ற அலங்காரங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன, இது ஜென்-இசட் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் அன்றாட ஆடைகளில் பிரிட்ஜெர்டன் ஃப்ளேயரைச் சேர்க்க விரும்புகிறது. அலங்காரமாக அலங்கரிக்கப்பட்ட பொத்தான்களுடன் வடிவமைக்கப்பட்ட வேலை ஆடை சட்டைகள், தொழில்முறை உடைகளுக்கு அதிநவீன தொடுதலைக் கொண்டு வருகின்றன. மேடமின் வடிவமைப்புத் தலைவரான பரிகா ராவல் வெளிப்படுத்தினார்: "எங்கள் பிரிட்ஜெர்டன் சேகரிப்பு, கடந்த காலத்தின் நேர்த்தியை தற்கால பாணியுடன் இணைக்கிறது, எந்தச் சந்தர்ப்பத்திலும் அணிந்திருப்பவர்களுக்கு பிரமிக்க வைக்கிறது. இது எங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பாகும். இன்றைய தொடர்ச்சியாக வளர்ந்து வரும் பேஷன் காட்சியில் அறிக்கை."